எண்.2127/தொ.து/ஜி/2024
புதுச்சேரி அரசு
தொழிலாளர் துறை
***

புதுச்சேரி, தேதி: 03.04.2024

## சுற்றறிக்கை

பொருள்: தொழிலாளர் துறை - தேர்தல் - இந்திய மக்களவை பொதுத்தேர்தல், 2024 - தேர்தல் நாள் 19.04.2024 (வெள்ளிக்கிழமை) அன்று விடுமுறை அறிவித்தல் - சம்பந்தமாக.

பார்வை: 02.04.2024 தேதியிட்ட, புதுச்சேரி அரசு, உள்துறை அறிக்கை. G.O.Ms.No.25.

***

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் எதிர்வரும் 19.04.2024 (வெள்ளிக்கிழமை) அன்று இந்திய மக்களவை பொதுத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் மற்றும் மாஹே பகுதிகளில் உள்ள அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதற்கு ஏதுவாக, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951, பிரிவு 135-B உட்பிரிவு (1) மற்றும் (2)-ன் கீழ், அனைத்து தொழிலாளர்களுக்கும் தேர்தல் நாளான 19.04.2024 (வெள்ளிக்கிழமை) அன்று முழு சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்குமாறு புதுச்சேரி பிரதேசத்தைச் சார்ந்த அனைத்து தொழிற்சாலை, கடை மற்றும் நிறுவன உரிமையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். சம்பந்தப்பட்ட சட்டப் பிரிவுகள் இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

<u>பிரிவு-135-B தேர்தல் நாளான்று தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளித்தல்:</u>

(1) வாணிபம், வியாபாரம், தொழில் நிறுவனங்கள் அல்லது பிற நிறுவனங்களில் பணிபுரியும் ஒவ்வொரு நபர்களுக்கும் மக்களவை அல்லது சட்டப்பேரவைக்கு நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்க உரிமை பெற்றவராக இருப்பின் அவர்களுக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)-ன் கீழ் விடுமுறை அளிக்கப்பட்ட நபருக்கு சம்பள பிடித்தமோ அல்லது சம்பள குறைப்போ செய்தல் கூடாது. மேலும் அத்தகைய நபரின் பணியின்படி விடுமுறை அளிக்காத பட்சத்தில் அவருக்கான ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும்.

2. இது சம்பந்தமாக ஏதேனும் விதிமீறல் இருக்குமேயானால் சட்டப்பிரிவு 135-B(3)ன்-கீழ் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

(சு. மாணிக்கதீபன்)
தொழிலாளர் ஆணையர் மற்றும்
தலைமை தொழிற்சாலை ஆய்வாளர்

Galaxy S22+